*கவனிக்க.- 26.07.2018 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2083 - 2018 අගෝස්තු මස 03 වැනි සිකුරාදා - 2018.08.03

*2083 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1528 |


**கவனிக்க.-** இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தம்) சட்டமூலம் 2018, யூலை மாதம் 26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2018, ஓகத்து மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஓகத்து மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.


*1525-B 81436-5,403 (2018/08)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

***4. பணிக்கமர்த்தும் நியதிகள் :***

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

***5. யுத்த சேவைச் சலுகை :***

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

இலங்கைச் சுங்கத் திணைக்களம்

### இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் சுங்க பரிசோதகர் II ஆம் தரப் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018

இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் சுங்க பரிசோதகர் II ஆம் தரப் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கென திறந்த போட்டிப் பரீட்சையொன்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2018, திசெம்பர் மாதத்தில் தீவு முழுவதிலும் அமைந்துள்ள பிரதான நகரங்களில் நிறுவப்படும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும். பரீட்சை நடைபெறும் திகதியானது பத்திரிகைகள் மூலம் உரிய காலத்தில் அறிவிக்கப்படும். இப் பரீட்சையினைப் பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை இலங்கைச் சுங்கத் திணைக்களம் கொண்டுள்ளது.

பரீட்சை நடைபெறவிருக்கும் நிலையங்கள் மற்றும் தொடர்புபட்ட நகர இலக்கங்கள் பின்வருமாறு :

**அட்டவணை I**

| மாகாணம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| மேல் | கொழும்பு | 01 |
| | கம்பஹா | 02 |
| | களுத்துறை | 03 |
| மத்தி | கண்டி | 04 |
| | மாத்தளை | 05 |
| | நுவரெலியா | 06 |
| தெற்கு | காலி | 07 |
| | மாத்தறை | 08 |
| | அம்பாந்தோட்டை | 09 |
| வடக்கு | யாழ்ப்பாணம் | 10 |
| | மன்னார் | 11 |
| | வவுனியா | 12 |
| | முல்லைத்தீவு | 13 |
| | கிளிநொச்சி | 14 |
| கிழக்கு | மட்டக்களப்பு | 15 |
| | அம்பாறை | 16 |
| | திருகோணமலை | 17 |
| வடமேல் | குருநாகல் | 18 |
| | சிலாபம் | 19 |
| வடமத்தி | அநுராதபுரம் | 20 |
| | பொலநறுவை | 21 |
| ஊவா | பதுளை | 22 |
| | மொனராகலை | 23 |
| சப்பிரகமுவ | இரத்தினபுரி | 24 |
| | கேகாலை | 25 |

பரீட்சார்திகள் போதாமை காரணமாக ஒரு சில மாவட்டங்களில் ஒரு சில பரீட்சை நிலையம் நிறுவப்படாத சந்தர்ப்பத்தில். பரீட்சார்த்திகளின் இரண்டாவது விருப்பத்தெரிவிற்கோ அல்லது அந்நகரத்திற்கு அண்மித்துள்ள வேறு நிலையத்திற்கோ அவர்கள் மாற்றப்படலாம். உத்தேசிக்கப்பட்ட நகரங்களில் நிறுவப்படும் பரீட்சை நிலையங்களுக்கு போதுமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்காவிடின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அப்பரீட்சையினை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

விண்ணப்பித்துள்ள நகரம் தொடர்பில் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இருபாலாரிடமிருந்தும் இப்பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **தகைமைகள்:-**

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தாம் பின்வரும் விடயங்கள் தொடர்பிலான திருப்திகரமான சான்றிதழினை சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) இலங்கைப் பிரசையாகவும்.

(ஆ) மிகச் சிறந்த ஒழுக்கமுடைவராகவும்.

(இ) விண்ணப்ப முடிவுத்திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 24 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் (இதற்கிணங்க 2000.08.31ஆந் திகதி அல்லது அதற்கு முன்பதாக பிறந்த மற்றும் 1994.08.31 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்தவர்கள் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவராவர்)

**குறிப்பு.**- ஏதேனும் சமயக்கிளையில் மதகுரு அந்தஸ்திலுள்ள எந்தவொரு நபருக்கும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

(ii) ***உடற் தகைமைகள்:-***

ஆண்களின் விடயத்தில் அவர்களுடைய உயரமானது 5 அடி 5 அங்குலங்கலுக்கு குறையாமலும் மார்புச்சுற்றளவு (விரிவடைந்த நிலையில்) 33 அங்குலங்களுக்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

பெண்களின் விடயத்தில் அவர்களுடைய உயரமானது 5 அடி 3 அங்குலங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

(iii) ***கல்வித்தகைமைகள்:-*** ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் கல்வித்தகைமைகளை உடையவராக இருத்தல் வேண்டும்:-

(அ) கல்விப் பொதுத்தராதர (உயர் தரப்)பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று பிராதன பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) சான்றிதழ் பரீட்சையில் இரு தடவைகளில் பிரதான பாடங்களான சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி மற்றும் கணிதம் அடங்கலாக ஐந்து பாடங்களில் திறமைச் சித்தியும் ஆங்கில மொழியில் ஆகக்குறைந்தது சாதாரண சித்தி அடங்கலாக ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

03. **சேவை நிபந்தனைகள்** :-

(i) ***வேதனம்***- இப்பதவிக்கான திரட்டிய மாதாந்த வேதன அளவுத்திட்டம் வருமாறு :
ரூபா 29,540-300 × 7-370 × 27 - ரூபா 41,630 (பொது நிருவாக சுற்றறிக்கை இல. 3/2016ஆ.எஸ்-1)

(01.01.2016 ஆந் திகதி தொடக்கம் 01.01.2020 ஆந் திகதி வரையிலான சம்பள கொடுப்பனவானது 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கிணங்க அமையும்.)

(ii) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துக்குரித்துமாகும் என்பதுடன் எதிர்காலத்தில் ஓய்வூதிய திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு இணங்குதலும் வேண்டும்.

(iii) சித்திபெற்று தெரிவாகும் பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுக்காலப்பகுதிக்கு தகுதிகாண் நிலையில் வைக்கப்பட்டு நியமனம் வழங்கப்படும்.

(iv) நியமனத்தர்கள் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றக்கூடிய உடல் நிலை தகுதியினை உடையவர்கள் என்பதை பரீட்சிப்பதற்காக அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரினால் நடாத்தப்படும் மருத்துவப் பரிசோதனைக்குட்படுதல் வேண்டும்.

(v) நியமனத்தர்கள் இத்தீவின் எப்பாகத்திலும் இரவிலும் பகலிலும் சேவையாற்றுதற்கு பணிக்கப்பட்டுள்ளார்கள்.

(vi) அரசாங்க வர்த்தமானி அறிவித்தலில் பகுதி I : தொகுதி (IIஅ) இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப்பதவிகளுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளுக்கு கவனம் கோரப்படுகின்றது.

04. **பரீட்சைத் திட்டம்** .- ஆட்சேர்ப்புக்கான பரீட்சையானது பின்வரும் மூன்று (03) வினாப்பத்திரங்களை கொண்டிருக்கும்:-

| | புள்ளிகள் |
|---|---|
| 1. உளச்சார்புப் பரீட்சை (1 மணித்தியாலம்) | 100 |
| 2. கணிதம் (1 மணித்தியாலம்) | 100 |
| 3. ஆங்கில மொழி (1½ மணித்தியாலங்கள்) | 100 |
| மொத்தம் | 300 |

**உளச்சார்புப் பரீட்சை வினாத்தாள்** .- இவ் வினாத்தாளானது மொழித் தேர்ச்சி, தர்க்க ரீதியான அறிவினை அளவிடும் வகையிலான வினாக்களைக் கொண்டிருக்கும். (இவ் வினாப்பத்திரமானது 50 பல்தேர்வு வினாக்களையும் குறுகிய விடைகளுக்கான வினாக்களையும் உள்ளடக்கும்). சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**கணித வினாத்தாள்** .- இவ் வினாத்தாளானது கணித அறிவினை பரிசோதிப்பதற்கான வினாக்களை கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**ஆங்கில மொழி வினாத்தாள்** - விண்ணப்பதாரிகளது வாசிப்பு, எழுத்து, கிரகித்தல் மற்றும் தொடர்பாடல் திறன்களை பரிசோதிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டதாக இருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**குறிப்பு**:- (i) இப்பரீட்சையானது சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். இந்த அறிவித்தலின் பந்தி 02 (iii) இல் குறிப்பிடப்பட்ட தகைமை பரீட்சையில் சித்திபெற்ற மொழியிலேயே விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். எனினும். தகைமை பரீட்சையை ஆங்கிலம் அல்லது தமிழ் மொழியில் சித்திபெறும் ஒரு விண்ணப்பதாரி அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழியில் கல்விகற்ற ஒரு விண்ணப்பதாரி தாம் விரும்பினால் இப்பரீட்சைக்கு சிங்கள மொழியில் தோற்றலாம். பரீட்சார்த்தி விண்ணப்பத்திற் கொடுத்த பரீட்சை மொழியை மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(i) தெளிவற்ற எழுத்துக்கும் மற்றும் எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும்.

(ii) தகைமையுடைய விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகளானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பிவைக்கப்படும். ஆனால் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் பெற்றுள்ளார் என கருதுதல் ஆகாது. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்படிதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாகுதல் வேண்டும்.

(iii) **மதிப்பிடுகை** - ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 60% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் தற்போதுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு இணங்க மொத்தத்தின் இறங்குவரிசையில் முதற்கட்ட நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். முதற்கட்ட நேர்முகப்பரீட்சையில் விளையாட்டு திறமைகளுக்காக ஆகக்கூடியது 10 புள்ளிகள் வழங்கப்படும். அதன்பின்னர் பொது நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும். இதன் போது எவ்வித புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது. பரீட்சைகளில் பெறப்பட்ட மொத்தப்புள்ளிகளும் முதற்கட்ட நேர்முகப்பரீட்சையில் வழங்கப்பட்ட புள்ளிகளும் மாத்திரமே கவனத்திற் கொள்ளப்படும்.

***முதற்கட்ட நேர்முகப்பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் நடைமுறை :***

வலய மட்டத்தில் தனிப்பட்ட விளையாட்டுக்கான புள்ளிகள் -
முதலாமிடத்திற்கு 3 புள்ளிகள்- இரண்டாமிடத்திற்கு 2 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 1 புள்ளி.

மாவட்ட மட்டத்தில் தனிப்பட்ட விளையாட்டுக்கான புள்ளிகள் -
முதலாமிடத்திற்கு 4 புள்ளிகள்- இரண்டாமிடத்திற்கு 3 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 2 புள்ளிகள்.

தேசிய மட்டத்தில் தனிப்பட்ட விளையாட்டுக்கான புள்ளிகள் -
முதலாமிடத்திற்கு 5 புள்ளிகள்- இரண்டாமிடத்திற்கு 4 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 3 புள்ளிகள்.

05. **தெரிவுமுறை அடிப்படை அல்லது தேர்ந்தெடுக்கும் முறை** .- எழுத்துப்பரீட்சையிலும் நேர்முகப்பரீட்சையிலும் திறம்பட சித்தியடைந்த பரீட்சார்த்திகள் நிதி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப நியமனங்களை உறுதிப்படுத்துவதற்கு தெரிவுசெய்யப்படுவர். நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களில் 10% பெண் விண்ணப்பதாரிகளுக்கு ஒதுக்கிவைக்கப்படும்.

05.(i) பெறுபேறு வெளியிடல் - எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப்பரீட்சைக்குத் தகுதிபெற்ற விண்ணப்பதாரியின் எழுத்துப் பரீட்சைப்புள்ளி மற்றும் நேர்முகப் பரீட்சையின் புள்ளி ஆகியவற்றின் மொத்தப் புள்ளிகளுக்கிணங்க இறங்குவரிசையில் தயாரிக்கப்பட்ட பட்டியலானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும். இலங்கைப் பரீட்சைத்திணைக்களம் பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளதும் பெறுபேற்றினை தபாலிலோ அல்லது www.results.examinations.gov.lk எனும் அலுவலக இணையத் தளத்தினூடாகவோ வெளியிடப்படும்.

**குறிப்பு**.- இலங்கைச் சுங்கத் திணைக்களத்தினது வேலைகளுக்கேற்ப பெண் அலுவலர்களும் இரவு வேளையில் கடமைபுரிய வேண்டியிருக்கும்.

06. விண்ணப்பதாரர் ஆண்/பெண் ஒவ்வொருவரும் பரீட்சைக்குரிய விண்ணப்பத் திகதி முடிவுறுவதற்கு முன்னர் சகல தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டுமென்பது கட்டாயமானதாகும்.

(அ) சகல விண்ணப்பதாரர்களும் பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுவதற்குக் கட்டுப்பட்டுள்ளனர். இவ் விதிமுறைகளை மீறுகின்ற பரீட்சார்த்திகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்குள்ளாக நேரிடக்கூடும்.

07. **விண்ணப்பிக்கும் முறை** :-

(i) இந்த அறிவித்தலின் இறுதியில் மாதிரி விண்ணப்பப்படிவம் ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தாம் பரீட்சை எழுதுவதற்கு உத்தேசித்துள்ள மொழி மூலத்தில் தாமாகவே விண்ணப்பங்களை இங்கு தரப்பட்டள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க தயாரித்து சொந்த கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பத்தினது ஒவ்வொரு கூட்டிலும் அறிவுறுத்தலுக்கிணங்க விண்ணபதாரர்களால் நிரப்பப்பட வேண்டியதுடன் ஏதாவது கூட்டினுள் பொருத்தமற்றவை இருப்பின். அத்தகைய கூட்டினுள் 'பொருத்தமற்றவை' என்ற பதம் எழுதப்படல் வேண்டும். கண்டிப்பாக கவனிக்கப்படவேண்டியது யாதெனில். விண்ணப்பத்தில் கூடுகள் நிரப்பப்படாது விடுதலானது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கான காரணமாக இருக்கும். (விண்ணப்பங்களானது A4 அளவிலான தாளில் தயாரித்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பத்தில் 01 தொடக்கம் 05 வரையான தலைப்பு இலக்கங்கள் முதல் பக்கத்திலும் 06 தொடக்கம் 11 வரையிலானவை இரண்டாவது பக்கத்திலும் மீதியானவை மூன்றாவது பக்கத்திலும் வரும் விதம் தயாரித்தல் வேண்டும்). சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூல மாதிரி விண்ணப்பங்களில் பரீட்சையின் தலைப்பானது ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களானது "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம். ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த.பெ.இல 1503. கொழும்பு" என்ற விலாசத்திற்கு 2018.08.31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் பெறப்படும் எந்தவொரு விண்ணப்படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். (விண்ணப்பதாரர்கள் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதியொன்றினை தம்மிடம் வைத்துக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.)

(iii) **பரீட்சைக் கட்டணம்** .- பரீட்சைக்கட்டணமாக ரூபா 600 வினை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 ஆம் இலக்க வருமான தலைப்பின் கீழ் அரச வருவாய்க்கு வரவு வைக்கும் வகையில் ஏதாவதொரு தபால் அலுவலகம் /உப தபால் அலுவலகத்தில் செலுத்தப்படல் வேண்டும். பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பதாரர்கள் பரீட்சைக்கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றினை தம்மிடம் வைத்துக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. இக்கட்டணம் எச்சந்தர்ப்பத்திலும் மீள செலுத்தப்படவோ அல்லது அதற்குப் பதிலாக வேறொரு பரீட்சைக்காக மாற்றீடு செய்யப்படவோ மாட்டாது.

(iv) அரசாங்க திணைக்களங்களில்/ சபைகளில்/ கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள் தற்போது தாங்கள் சேவையாற்றும் திணைக்களங்கள் அல்லது நிறுவனங்களின் தலைவர்களினூடாக

தங்களது விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை 2018.08.31ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினை சென்றடைய வேண்டுமென்ற வேண்டுகோளுடன் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் திணைக்கள அல்லது நிறுவனங்களின் தலைவர்களுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் தனிப்பட்டமுறையில் சுங்கப்பணிப்பாளர் நாயகத்திற்கோ அல்லது திணைக்களத்தைச் சேர்ந்த வேறு எவரேனும் உத்தியோகத்தருக்கோ அனுப்பப்படலாகாது. இத்திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள். அவை அத்திணைக்களங்களுக்கூடாக அனுப்பப்பட்டாலும் கூட அவைகள் நிராகரிக்கப்படும். அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பத்தில் திணைக்களத் தலைவர்/ நிறுவனத் தலைவர் விண்ணப்பதாரரது கையொப்பத்தினை உறுதிப்படுத்தி அவரது கையொப்பம், அலுவலக முத்திரை என்பன இடப்படாதவிடத்து அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(v) ***உறுதிப்படுத்துதல்.***- அரசாங்க சேவையிலுள்ளதொரு விண்ணப்பதாரியின் கையொப்பமானது அவரது திணைக்களத் தலைவரினால் அல்லது அவரது சார்பில் அதிகாரப்படுத்தப்பட்ட அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

ஏனைய விண்ணப்பதாரரின் கையொப்பங்கள் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதாவது சமாதான நீதவான், சத்தியப்பிரமான ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்த நொத்தரிசு, அரசாங்க பாடசாலை அதிபர், கடற்படை, வான்படை அல்லது தரைப்படை அதிகாரமுடைய அதிகாரி, ரூபா 240,360 அல்லது அதற்கு மேல் வருடாந்த சம்பளமுள்ள நிரந்தர அரசாங்க அலுவலர், பௌத்த ஆலயமொன்றின் பிரதம குரு அல்லது உயர்மத குரு அல்லது ஏதாவது வழிபாட்டுத்தலமொன்றுக்கு பொறுப்பாகவுள்ள அல்லது முக்கிய பதவி வகிப்பவர்.

08. (i) **பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம்.**- வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய வர்கள் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க கணிப்பீட்டின்படி வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயது எல்லைக்குட்பட்ட மற்றும் குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக்கட்டணம் செலுத்திய மற்றும் பரீட்சைக்கு தோற்ற திட்டமிட்டுள்ள மொழியும் நகரத்தின் பெயர் அடங்கலாக உரிய முறையில் பூரணப்படுத்திய விண்ணப்பங்களை முடிவுத்திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பித்துள்ள. விண்ணப்பதாரரின் கையொப்பம், கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் மற்றும் பரீட்சைக்கட்டண பற்றுச்சீட்டுடன் திணைக்களத் தலைவரது (தேவையாயின்) உறுதிப்படுத்தல் போன்ற விடயங்களை பூரணப்படுதிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வினியோகிக்கப்படும்.

பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வினியோகிக்கப்பட்டதும் பரீட்சைத் திணைக்களம் அது தொடர்பாக பத்திரிகை அறிவிப்பொன்றினை வெளியிடும். அவ் அறிவித்தல் வெளியாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அப்போது விண்ணப்பதாரியின் முழுப்பெயர், விலாசம், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் என்பன குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்பின் வெளிப்பிரதேசத்தில் வசிப்பவராயின், மேலே குறிப்பிட்ட விடயங்களுடன் அனுமதி அட்டை அனுப்புவதற்கான பெக்ஸ் இலக்கம், குறிப்பிட்ட உங்களது கோரிக்கைக் கடிதமொன்றினை அனுப்புவதன் மூலம் திணைக்களத்தினை தொடர்புகொள்வதற்கு மிகவும் பொருத்தமாகவிருக்கும். இதன்போது பரீட்சைக்கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு மற்றும் பதிவுத்தபால் இலக்கம் என்பவற்றுடன் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றினை சமர்ப்பிப்பதன் மூலம் இதனை மேலும் இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும்.

(ii) பரீட்சைக்குத் தோற்றுகின்ற சகல விண்ணப்பதாரியும் பரீட்சை அனுமதி அட்டையில் தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொள்ளுவதுடன் அனுமதிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்தப்பட்ட தமது அனுமதி அட்டைகளை சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள். பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் ஒழுங்கு விதிகளும் இவ்வர்த்தமானியின் பகுதி I தொகுதி II (அ) வில் வேறாக தரப்பட்டுள்ளன. இந்த விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றிய அறிவித்தலானது விண்ணபதாரர்களுக்கு வினியோகிக்கப்பட மாட்டாது. பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேற்றினை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்படிதல் வேண்டும். இந்த விதிகள் மற்றும்

ஒழுங்குவிதிகளை மீறுகின்ற சந்தர்ப்பத்தில். அவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டணைகளுக்கு ஆளாக நேரிடும்.

**குறிப்பு** .- பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகுதிகளையும் உடையவர் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதனமாக கொள்ளவியலாது

09. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் அவர்களது ஆளடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனுடிமான்று ஏற்றுக்கொள்ளப்படும்

(அ) ஆட்களைப்பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.
(ஆ) பரீட்சைத் திகதிக்கு முன்பதாக ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாது வழங்கப்பட்ட செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்கூறப்பட்டவாறான ஆவணமொன்றினை சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியின் பரீட்சார்த்தத்தன்மை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பெயரில் நிராகரிக்கப்படலாம்.

10. **தகைமை ஆவணங்கள்** :-

(i) விண்ணப்பத்துடன், பரீட்சைக்கட்டணமாக செலுத்தப்பட்ட காசுக்கட்டளை தவிர்ந்த பிற ஆவணங்கள் எதுவும் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது. ஆனால் விதித்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் தேவையான விபரங்கள் விண்ணப்பத்தில் தரப்பட்டிருத்தல் வேண்டும். இந்த முறையில் சகல அம்சங்களிலும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பமானது அதன் தகுதிகளின் பெயரில் தீர்மானிக்கப்பட்டு நிராகரிக்கப்படலாம்.

(ii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் தகுதிபெற்ற பரீட்சார்த்திகள் தமது தகைமைகளை நிரூபிப்பதற்கான ஆவணச்சான்றிதழ்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii) பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் தேவைப்படும்:-

(அ) பொறுப்புள்ள ஆளொருவரினால் ஒப்பமிடப்பட்ட குணநலச் சான்றிதழ்.

**குறிப்பு**:- இத்தகைய குணநலச்சான்றிதழானது சமாதான நீதவான், வழக்கறிஞர், வதிவிட பிரதேச செயலாளர் அல்லது ஆண்டொன்றிக்கு ரூபா 240,360 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை திரட்டிய சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் அல்லது பொதுவாக நன்கு தெரிந்தவர்கள் இலகுவாக சிபாரிசு பெற்றுக்கொள்ளக்கூடியதுமான ஒருவரால் பெறப்படலாம். இத்தகைய உறுதிப்படுத்துபவரது பெயர், பதவி, முகவரி என்பன சான்றுபடுத்தலில் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

(அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் பரீட்சார்த்திகளின் விடயத்தில் அவர்கள் குணநல சான்றிதழ்களை சமர்ப்பிக்கும்படி கேட்கப்படமாட்டார்கள்)

(ஆ) பரீட்சார்த்தியின் பிறப்புப் பதிவினது சான்றுபடுத்தப்பட்ட ஒரு பிரதி அல்லது பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட வயது பற்றிய ஒரு விசேட சான்றிதழ் (பிறப்பு பதிவு செய்யப்படாத பரீட்சார்த்திகளது விடயத்தில்)

**குறிப்பு** :-

(i) பாடசாலை அல்லது கல்வித் தேவைகளுக்கென வழங்கப்பட்ட விசேட பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறப்புப் பதிவிலிருந்து எடுக்கப்பட்ட சான்றுபடுத்தப்பட்டதொரு பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ii) பிறப்புச்சான்றிதழ்களுக்குப் பதிலாக நம்பிக்கை உறுதிப்பத்திரங்களோ அல்லது ஞானஸ்நான சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பரீட்சார்த்தி சாதாரணமாக பயன்படுத்தும் பெயர் அல்லது பெயர்களிலிருந்து பிறப்புச்சான்றிதழில் உள்ள பெயர் அல்லது பெயர்கள் வேறுபடின் அல்லது பரீட்சைக்கு விண்ணப்பதாரி தோற்றும் பெயர் வேறுபடின் பிறப்புகள் இறப்புகள் பதிவுச் சட்டத்தின் (அத்தியாயம் 110) 27ஆம் மற்றும் 28ஆம் பிரிவுகளின் நியதிகளுக்கு அமைய பிறப்புப்பதிவிலுள்ள பெயரை திருத்துவதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படல் வேண்டும்.

(iii) இலங்கைப்பிரசை என்ற பதிவுச்சான்றிதழ் அல்லது வம்சாவளிப் பிரசாவுரிமைக்கான கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்ட மூல உத்தியோகபூர்வ கடிதம் (ஏற்புடையதாயின்).

(iv) கல்வித்தகைமை மூலச்சான்றிதழ்கள் அல்லது அத்தகைய சான்றிதழ்கள் வழங்கப்படாதவிடத்து ஏனைய உத்தியோக பூர்வ ஆவணங்கள்.

(v) வலய/மாவட்ட/தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பெற்றுக்கொண்ட நிரூபண ஆவணம்.

(vi) விண்ணப்பத்தினை அனுப்புகின்ற சமயத்தில் சகல தேவையான ஆவணங்களையும் தயாராக வைத்திருக்கும் படி பரீட்சார்த்திகள் வேண்டப்படுகின்றனர். தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற அல்லது தேவையான சந்தர்ப்பத்தில் அவற்றை சமர்ப்பிப்பதில் தாமதங்களை ஏற்படுத்துகின்ற பரீட்சார்த்திகள் இப்பதவிக்கான நியமனத்திற்கு தகுதியற்றவர்களாவர்.

11. **தவறான தகவல்களை சமர்ப்பிப்பதற்கான தண்டனை.-** இப்பரீட்சைக்கான ஒழுங்கு விதிகளின்படி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் அதற்குத் தோற்றுவதற்கு தகைமை அற்றவர் என தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

பரீட்சைக்கு விண்ணப்பதாரி ஒருவரினால் தரப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏதேனும் அவரது அறிவுக்கு எட்டியவரையில் தவறானவை என அல்லது வேண்டுமென்றே விபரங்களை தரவில்லையெனக் காணப்படின் அல்லது அவரது சேவைக்காலத்தின் எக்காலப்பகுதியிலேனும் அவர் பரீட்சைக்குத் தோற்றும் தகைமையற்றவர் என நிரூபிக்கப்படின் அவர் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவார். இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணக்கமாக இல்லாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. இந்த ஒழுங்கு விதிகளில் கவனிக்கப்படாத ஏதேனும் விடயம் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி கையாளப்படும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தலில் யாதேனும் வித்தியாசம் காணப்படின் சிங்கள மொழியில் வெளியிடப்படும் அறிவித்தலே வலுப்பெறும்.

சுங்கப் பணிப்பாளர் நாயகம்.

இலங்கைச் சுங்கத் திணைக்களம்.
"சுங்க இல்லம்",
இல. 40, பிரதான வீதி,
கொழும்பு 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் சுங்கப் பரிசோதகர் II ஆம் தரப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018**

**OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO POSTS OF INSPECTOR OF CUSTOMS, GRADE- II OF SRI LANKA CUSTOMS DEPARTMENT - 2018**

(அலுவலக பாவனைக்கு மாத்திரம்)

நீர் இப்பரீட்சையில் தோற்றுவதற்கான மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

தெரிவு செய்த நகரமும் நகர எண்ணும் (அட்டவணை I ஐப் பார்கவும்)

| நகர தெரிவு | நகரம் | நகர எண் |
|---|---|---|
| 1 ஆம் தெரிவு | | |
| 2 ஆம் தெரிவு | | |

01. 1.1 விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் வரும் பெயரை முதலிலும் மற்றைய பெயர்களின் முதலெழுத்துக்களை பின்னாலும் வரும் முறையில் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (தமிழில்/ஆங்கிலத்தில்) :----.

02. நிரந்தர வதிவிட விலாசம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
அனுமதி அட்டை அனுப்பப்படவிருக்கும் விலாசம் :----.

03. தேசிய ஆளடையாள அட்டையினது விபரங்கள் :-

3.1 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | | |

3.2 வழங்கப்பட்ட திகதி : | | | | | | | | |

04. பால் :
ஆண் - 0 ☐
பெண் - 1
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

05. (அ) பிறந்த திகதி:

| ஆண்டு | | | | மாதம் | | திகதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

(ஆ) விண்ணப்பம் முடிவுத் திகதியன்று வயது:

| வருடங்கள் | | மாதங்கள் | | நாட்கள் | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

06. நீங்கள் இலங்கைப் பிரசையா இல்லையா என்பதைக் குறிப்பிடவும்

வம்சாவழி மூலம் - 1 பதிவு மூலம் - 2 ☐
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

07. இனம் :
சிங்களவர் - 1 இலங்கைத் தமிழர் - 2
இந்தியத் தமிழர் - 3 முஸ்லிம் - 4 ☐
பறங்கியர் - 5 ஏனையோர் - 6
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

08. செல்லிட தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

09. உடற் தகைமை தேவைப்பாடுகள் :

(i) உயரம் : ........அடி .........அங்குலங்கள்
(ii) மார்புச் சுற்றளவு (விரிவடைந்த நிலையில்):
.......... அங்குலங்கள்
(ஆண் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)

10. நீர் ஏதாவது குற்றச் செயலுக்காக எப்பொழுதாவது நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா? : (ஆம்/இல்லை)
ஆம் எனில், விபரங்களைக் குறிப்பிடவும் :----.

11. கல்வித் தகைமைகள்:

(i) ஒரே தடவையில் பெறப்பட்ட கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பெறுபேறு :-

பரீட்சையினது வருடம் .......................
சுட்டெண் .....................................

| பாடங்கள் | பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| | |

(ii) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரப்) பெறுபேறு:-

| பாடங்கள் | பெறுபேறு | வருடம் | சுட்டெண் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(iii) கல்விப் பொதுத் தராதர (சாதரண தரப்) பரீட்சையில் ஆங்கில மொழியில் சாதாரண சித்தியினை பெற்றுள்ளீரா?
(ஆம்/இல்லை) ☐

12. பரீட்சைக் கட்டணம் (பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும்) :----.

I. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால்/உப-தபால் அலுவலகம் :----.
II. செலுத்திய பணம் :----.
III. செலுத்திய திகதி :----.
IV. பற்றுச்சீட்டு இலக்கம் :

பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தம்வசம்
வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

(இந்த விபரங்கள் கட்டாயமாக கொடுக்கப்படல் வேண்டும்)

13. விண்ணப்பதாரியின் உறுதியுரை/சான்றுப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதிமொழிகிறேன். இவற்றில் அடங்கியுள்ள விபரங்களில் ஏதேனும் பொய்யானவை அல்லது தவறானவை எனக் காணப்படின் தெரிவுக்கு முன்னராயின் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும் அல்லது தெரிவின் பின்னரோ பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் கடப்பாடுடையவனாவேன். மேலும் பரீட்சை நடத்துதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினது சட்ட விதிகளுக்கமைய நான் நடந்து கொள்வேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

14. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :

(பொருத்தமற்றதை வெட்டிவிடவும்) :

இவ் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .................................................. என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் என்றும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் ...................... ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தினை செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டானது இணைக்கப்பட்டுள்ளது எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

உறுதிப்படுத்துபவரது கையொப்பம் :----.
உறுதிப்படுத்துபவரது முழுப் பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

**குறிப்பு**: வர்த்தமானி அறிவித்தலின் 7(V) ஆம் பந்தியில் குறிப்பிட்டதொரு நபரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

14. இவ் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ......................................................................... என்பவர் இவ் அமைச்சில் /திணைக்களத்தில்/சபையில்/கூட்டுத்தாபனத்தில் கடமை புரிபவர் என்றும் அவர் மேலே குறிப்பிட்ட பதவிக்கு தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும்/முடியாது.

-----,
திணைக்களத் தலைவரினது கையொப்பம்.
(அலுவலக முத்திரை)

திணைக்களத் தலைவரது பெயர் :----.
பதவி :----.
திணைக்களத்தின் விலாசம் :----.
திகதி :----.

8-133

---

## சுங்க உதவி அத்தியட்சகர் II ஆம் தரப் பதவிக்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2018

விண்ணப்பங்களானது பின்வரும் அலுவலர்களிடமிருந்து கோரப்படுகின்றன :

(அ) பிரதான சுங்க பரிசோதகர்கள் அல்லது
(ஆ) சுங்கப் பரிசோதகர் தரம் I இல் 02 வருடங்கள் திருப்திகரமான சேவையினை பூர்த்திசெய்து நிரந்தரமாக்கப்பட்ட சுங்கப் பரிசோதகர் தரம் I ஐச் சேர்ந்தவர்கள்.

இவர்களில் பின்வரும் தகைமைகளைக் கொண்டவர்களைக் கொண்டு சுங்க உதவி அத்தியட்சகர் II ஆம் தரம் பதவியில் தற்போதுள்ள வெற்றிடங்களில் 15% நிரப்பப்படும்.

**தொழில்சார் தகைமைகள் :**

(i) விண்ணப்ப முடிவுத் திகதியன்று முன்னுள்ள 5 வருட காலப்பகுதியில் முனைப்பானதும் திருப்திகரமானது மான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் அக்காலப்பகுதியில் சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்திருத்தலும் வேண்டும்;

(ii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்று மதிப்பீட்டு நடைமுறைத் திட்டத்திற்கேற்ப செயலாற்று மதிப்பீட்டு மட்டமானது சராசரி அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தில் இருத்தல் வேண்டும்;

(iii) தொடர்புபட்ட வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

02. விண்ணப்பமானது இந்த அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கிணங்க ஏ4 அளவிலான தாளின் இரு பக்கத்திலும் தயாரிக்கப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தில் 1 தொடக்கம் 9 வரையான தலைப்பு இலக்கங்கள் முதல் பக்கத்திலும் மீதியானவை மறுபக்கத்திலும் அமையுமாறு தயாரித்தல் வேண்டும். பரீட்சை அறிவித்தலில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கிணங்க விண்ணப்பப்படிவம் விண்ணப்பதாரியினால் பூர்த்திசெய்யப்பட்டது என்பதனை உறுதிப்படுத்துவது பரீட்சார்த்தியினது பொறுப்பாகும் என்பதுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றினை தம்முடன் வைத்துக்கொள்வது பயனுள்ளதுமாகும். சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல மாதிரி விண்ணப்பப்படிவங்களில் பரீட்சையின் தலைப்பானது ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். உரியமுறையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் அவர்களது பணிப்பகத்தின் தலைவர்கள் ஊடாக 31.08.2018 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சுங்கத் திணைக்களத்தின் மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம் (மனித வளம்) அவர்களுக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

பரீட்சைக் கட்டணமாக ரூபா 500 ஐ ஏதாவது தபால்/உப தபால் அலுவலகத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13ஆம் இலக்க வருமான தலைப்பின் கீழ் வரவு வைப்பதற்காக செலுத்துதல் வேண்டும். பற்றுச்சீட்டானது விண்ணப்பத்தின் குறித்த இடத்தில் ஒட்டப்படல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பதாரர்கள் பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தம்மிடம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாகும். இக்கட்டணமானது எச்சந்தர்ப்பத்திலும் மீள செலுத்தப்படமாட்டாது. பரீட்சைக் கட்டணம் தொடர்பில் காசுக்கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

03. இப்பரீட்சையானது எழுத்துப் பரீட்சை மற்றும் பொது நேர்முகப் பரீட்சை ஆகிய இரு பகுதிகளைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு பரீட்சைக்குமான புள்ளிகள் மற்றும் ஒதுக்கப்பட்டுள்ள நேரம் வருமாறு :

**பகுதி** I

| | புள்ளிகள் |
|---|---|
| எழுத்துப் பரீட்சை | |
| சுங்க நடைமுறைகள் (02 மணித்தியாலங்கள்) | 100 |
| எளிய கணிதம் (01 மணித்தியாலம்) | 100 |

**பகுதி** II

பொது நேர்முகப் பரீட்சை (புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது)
(குறித்த இப்பதவிக்குரிய ஆட்சேர்ப்புக்கான ஆகக்குறைந்த தகைமைகளை பரீட்சார்த்திகள் கொண்டுள்ளனரா என்பதனைப் பரீட்சித்தல்)

04. இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர்கள் சகல பரீட்சைகளுக்கும் ஒரு மொழியிலேயே தோற்ற வேண்டும் என்பதுடன் அம்மொழியானது அவர்கள் தற்போதுள்ள சேவைக்கு உள்வாங்குவதற்கு தகுதிபெற்றதாகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் பரீட்சையின் மொழியினை மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேற்றினை வெளியிடல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் முடிவே இறுதியானதாகும்.

**05. இப்பரீட்சையின் பாடங்களது பாடத்திட்டமானது வருமாறு** :

**பாடத்திட்டம்** : சுங்க நடைமுறைகள்

1. அ. கடல் மார்க்க/ஆகாய மார்கமான சரக்குகளை ஏற்றுதல், இறக்குதல், களஞ்சியப்படுத்துதல் மற்றும் வெளியாக்குதல்
   ஆ. இறக்குமதி களஞ்சியசாலையொன்றில் பொறுப்பாகவுள்ள உதவி சுங்க அத்தியட்சகர் தரம் II அவர்களது கடமைகள்
   இ. நீலப் புத்தகத்தினை பூர்த்திசெய்தல்
   ஈ மதுபான களஞ்சியசாலையில் பொறுப்பாகவுள்ள உதவி சுங்க அத்தியட்சகர் தரம் II அவர்களது கடமைகள்.

2. ஏற்றுமதி
   அ. தரையிறங்குவதற்காகப் பெறப்பட்ட சரக்கு தொடர்பில் பின்பற்றப்படும் நடைமுறை
   ஆ. ஏற்றுமதி விபரங்களை நுண்ணாய்வு செய்தல்
   இ. இருப்புக் கையேட்டினை பேணுதல்

3. மாற்றி ஏற்றல் சரக்கு
   அ. கடல் மார்க்கப் பொருட்கள் தொடர்பிலான பொதியிலடைக்கப்பட்ட சரக்கு (stuffing) மற்றும் பொதியிலடைக்கப்படாத சரக்கு (De-stuffing)
   ஆ. மாற்றி ஏற்றல் பொருட்பட்டியல்களை தயாரித்தல்
   இ. கரையோர கப்பல் சரக்கு

4. பிணைப்படுத்தப்பட்ட களஞ்சியசாலைகளுடன் தொடர்புபட்ட வெளியாக்கல் செயல்முறை

5. பொது –

- மீளளிப்புகளை சான்றுபடுத்துதல் தொடர்பிலான மீளளிப்புகள் மற்றும் நிபந்தனைகள்
- தீர்வை மீளளிப்புக்கு வரையறுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்
- மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்களது அட்டவணை (நாட்டுக்குள் கொண்டுவரல் மற்றும் நாட்டிலிருந்து கொண்டு செல்லல் தொடர்பிலானவை)
- பிரகடனப்படுத்தாத சரக்குகள், பிழையான பிரகடனம் மற்றும் பொருட்களது பெறுமதியினை குறைத்து மதிப்பிடல் ஆகியவை தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைக்காக சுங்கக் கட்டளைச்சட்டத்தினால் வழங்கப்படும் அமுல்படுத்தல் அதிகாரங்கள்
- பரிசோதனை செய்தல்/ தேடுதல் மற்றும் தடுப்புக்காவலில் வைத்தல் என்பவை தொடர்பில் சுங்கக் கட்டளைச்சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள நடைமுறைகள்
- சட்டரீதியற்ற முறையில் இறக்குமதி செய்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல் என்பவை தொடர்பில் சுங்கக் கட்டளைச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் அலுவலர்களது கடமைகளுடன் தொடர்புபட்ட சகல திணைக்களக் கட்டளைகள்

6. எளிய எண்கணித/ அடிப்படைக் கணித வினாத்தாளுக்கான பாடத்திட்டம் பின்வருவனவற்றினைக் கொண்டிருக்கும்:

இவ்வினாத்தாள் கூட்டல், கழித்தல், பெருக்குதல் மற்றும் வகுத்தல் போன்ற எண்கணித செயல்பாடுகளில் பரீட்சார்த்தியின் திறமையினையும் கணித வினாக்களை தீர்க்கும் வேகத்தையும் பரீட்சிக்கும் வகையிலும் மற்றும் பரீட்சார்த்தியின் கணித மற்றும் தர்க்கரீதியிலான அறிவினைப் பரீட்சிக்கும் வகையிலும் அமையும்.

6.1 ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளை பெறுகின்ற (சுங்க நடைமுறைகள் மற்றும் எளிய கணிதம்) அல்லது இரண்டு வினாப்பத்திரங்களிலும் மொத்தமாக 100 புள்ளிகளையோ அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளையோ பெறுகின்ற பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

6.2 **பரீட்சைப் பெறுபேறு** : மேலே 6.1 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறாக வெற்றிகரமான பரீட்சார்த்திகளது பெயர்களடங்கிய பெறுபேற்றுப் பட்டியல் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு பரீட்சைகள் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைகள் திணைக்களம், பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளதும் பெறுபேற்றினை தபாலிலோ அல்லது www.results.exams.gov.lk எனும் அலுவலக வெப் தளத்தினூடாகவே வெளியிடும்.

07.

7.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரியினால் விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனும் ஊகத்தின் பேரில், விண்ணப்பங்களை சமர்ப்பித்த சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்படும். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்டதும் பரீட்சைத் திணைக்களம் அது தொடர்பாக பத்திரிகை அறிவிப்பொன்றினை வெளியிடும். அவ் அறிவித்தல் வெளியாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அப்போது விண்ணப்பதாரியின் முழுப்பெயர், விலாசம், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் என்பன குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்பின் வெளிப்பிரதேசத்தில் வசிப்பவராயின், மேலே குறிப்பிட்ட விடயங்களுடன் அனுமதி அட்டை அனுப்புவதற்கான பெக்ஸ் இலக்கம், குறிப்பிட்ட உங்களது கோரிக்கை கடிதமொன்றினை அனுப்புவதன் மூலம் திணைக்களத்தினை தொடர்புகொள்வதற்கு மிகவும் பொருத்தமாகவிருக்கும். இதன்போது பரீட்சைக்கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு மற்றும் பதிவுத்தபால் இலக்கம் என்பவற்றுடன் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றினை சமர்ப்பிப்பதன் மூலம் இதனை மேலும் இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

7.2 ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அவருக்கு பரீட்சை மண்டபத்தில் ஒதுக்கப்பட்டுள்ள குறியீட்டு இலக்கத்திற்கு இணங்க பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற சகல விண்ணப்பதாரியும் பரீட்சை அனுமதி அட்டையில் தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொள்வதுடன் பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்தப்பட்ட தமது அனுமதி அட்டைகளை சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

7.3 கண்காணிப்பாளர்களை திருப்திப்படுத்தும் வகையில் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் அவர்களது ஆளடையாளத்தினை நிரூபிப்பதற்கு வேண்டப்படுவர். இந்நோக்கத்திற்காக பின்வரும் ஏதேனும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்:-

(அ) ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆளடையாள அட்டை;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

08 i. விண்ணப்பதாரிக்கு அனுமதி அட்டை வழங்கப்படுவதன் மூலம் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது இப்பதவிக்கு நியமிக்கப்படுவதற்குத் தேவையான தகைமையைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

ii. இப்பரீட்சையானது கொழும்பில் மாத்திரம் நடைபெறும். பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் இடம் என்பன உரிய வேளை அறிவிக்கப்படும்.

09. பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேற்றினை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்படிதல் வேண்டும். இந்த விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறுகின்ற சந்தர்ப்பத்தில், அவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாக நேரிடும்.

10. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தலில் யாதேனும் வித்தியாசம் காணப்படின் சிங்கள மொழியில் வெளியிடப்படும் அறிவித்தலே வலுப்பெறும். இந்த ஒழுங்குவிதிகளில் கவனிக்கப்படாத ஏதேனும் விடயம் நிதி அமைச்சுச் செயலாளரின் தற்றுணிபின் படி கையாளப்படும்.

சுங்கப் பணிப்பாளர் நாயகம்,
இலங்கைச் சுங்கத் திணைக்களம்.

"சுங்க இல்லம்"
இல. 40, பிரதான வீதி,
கொழும்பு 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுங்க உதவி அத்தியட்சகர் II ஆம் தரப் பதவிக்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2018**

**LIMITED COMPETITIVE EXAMINATION FOR PROMOTION TO THE POSTS OF ASSISTANT SUPERINTENDENT OF CUSTOMS, CLASS II -2018**

☐

(அலுவலக பாவனைக்கு மாத்திரம்)

நீர் இப்பரீட்சையில் தோற்றுவதற்கான மொழி மூலம் :

சிங்களம் - 2 ☐
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

01. விண்ணப்பதாரியின் பெயர் :----.

1.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியாக வரும் பெயரை முதலிலும் மற்றைய பெயர்களின் முதலெழுத்துக்கள் பின்னரும் வருமாறு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம்: GUNAWARDHANA.H.M.S.K)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

02. அனுமதி அட்டை அனுப்புவதற்கான விலாசம் :----.

03. தேசிய ஆளடையாள அட்டையினது விபரங்கள் :

3.1 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

3.2 திணைக்களஅடையாள அட்டை இலக்கம் :----.

04. பால் :

ஆண் - 0 ☐
பெண் -1
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

05. தற்போதைய பதவியும் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதியும் :----.

06. தற்போதைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :----.

07. தற்போதைய பதவிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மொழி :----.

08. தற்போது கடமைபுரியும் இடம் :----.

09. கல்வித் தகைமைகள் :----.

10. பிற விசேட தகைமைகள் :----.

11. பரீட்சைக் கட்டணம் செலுத்துகை தொடர்பிலான விபரம் :

I. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால்/உப தபால் அலுவலகம் :----.
II. பற்றுச்சீட்டு இலக்கம் :----.
III. செலுத்திய பணம் :----.
IV. செலுத்திய திகதி :----.

| பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும். |
|---|

12. விண்ணப்பதாரரின் உறுதியுரை/சான்றுப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும். சரியானவை எனவும் இத்தால் உறுதிமொழிகிறேன். மேலே பந்தி 03 இல் குறிப்பிட்ட மொழியில் தோற்றுவதற்கு நான் தகுதியுடையவனாவேன். மேலும் பரீட்சை நடத்துதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினது சட்ட விதிகளுக்கமைய நான் நடந்து கொள்வேன்.

-----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

13. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் (பொருத்தமற்றதை வெட்டிவிடவும்) :

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .......................... என்பவர் எனது அலுவலகத்தில்/ பணிப்பகத்தில் கடமைபுரியும் உத்தியோகத்தர் எனவும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் 2018........................ ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

உறுதிப்படுத்துபவரது கையொப்பம் :----.
உறுதிப்படுத்துபவரது பெயர் :----.
பதவி :----.
அலுவலக முத்திரை :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரினது சான்றுப்படுத்தல்.-**

இவ் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .......................... என்பவர் எனது அலுவலகத்தில் சுங்க பிராதன பரிசோதகர்/சுங்க பரிசோதகர் தரம் I எனும் பதவியில் கடமை புரிபவர் என்றும் மேலே பந்தி 01 தொடக்கம் 11 வரையிலான விபரங்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் சான்றுபடுத்துகிறேன். மேலும் அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தினை செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டானது இணைக்கப்பட்டுள்ளது எனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியுடையவர் எனவும் சான்றுபடுத்துகிறேன்.

சான்றுப்படுத்துபவரது கையொப்பம் :----.
சான்றுப்படுத்துபவரது பெயர் :----.
பதவி :----.
அலுவலக முத்திரை :----.
திகதி :----.

8-134

## கல்வி அமைச்சு

### இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை– 2018

இலக்கம் 1885/31 மற்றும் 2014.10.22 ஆம் திகதிய இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பிற்கு அமைய இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2018 நவெம்பர் மாதம் கொழும்பில் நடைபெறும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. இப் பரீட்சைக்குரிய பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் இலக்கம் 1885/ 31 கொண்ட 2014.10.22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப் பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களின் வசதிக்காக பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(அ) **பரீட்சை ஒழுங்கு விதிகள்** - வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் பாடங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:-

(i) விடய இல. 01 - பாடசாலை நிருவாகம் மற்றும் மேற்பார்வை :
100 புள்ளிகள் - 3 மணித்தியாலம்
(ii) விடய இல. 02 - பாடசாலைத் திட்டமிடல் :
100 புள்ளிகள் - 3 மணித்தியாலம்
(iii) விடய இல. 03 - கல்வியின் புதிய முன்னேற்றங்கள் மற்றும் செயற்பாடுகள் :
100 புள்ளிகள் - 3 மணித்திலாயம்

**பாட விதானம்** :-

(i) ***பாடசாலை நிருவாகம் மற்றும் மேற்பார்வை.***- பாடசாலை ஒன்றின் சிறந்த நிருவாகத்திற்காக அதிபரின் செயற்பாட்டுப் பணிகள் தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவு மற்றும் விளக்கத்தை பரிசீலனை செய்வதற்கான கேள்விகள் இதில் அடங்கியுள்ளன. பாடசாலை முகாமைத்துவ முறைகள், நேரசூசியைத் தயாரித்தல், பொறுப்புக்களைப் பகிர்தல், பாடசாலை அபிவிருத்திக்காக மக்கள் பங்கேற்பு, பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவம், பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி, ஆசிரியர் நலன்புரி, மாணவர்களுக்குப் பொருத்தமான பாடசாலை சார்ந்த சிந்தனைகள், பாடசாலையைக் கேந்திரமாகக் கொண்ட கல்வி ஆகிய துறைகள் தொடர்பில் அறிவு மதிப்பீடு செய்யப்படும்.

(ii) ***பாடசாலைத் திட்டமிடல்.***- அபிவிருத்தியின் முன்னோடியான அதிபர்களின் செயற்பாடுகள் தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவு மற்றும் விளக்கத்தைப் பரீட்சிப்பதற்கான கேள்விகள் இதில் உள்ளடங்கியுள்ளன. பாடசாலை முகாமைத்துவ சபை, பாடசாலை நோக்கு மற்றும் பணிகள், பாடசாலைத் தகவலை அடிப்படையினை வகுத்தல், இணைந்த திட்டங்கள், நீண்ட கால மற்றும் குறுகிய காலத் திட்டங்கள், வருடாந்தம் அமுல்படுத்தும் திட்டங்கள், பாடசாலை வலையமைப்பு மற்றும் வளத் திட்டமிடல், பிரதேச அபிவிருத்திக்கு பாடசாலையின் பங்களிப்பு ஆகிய துறைகள் தொடர்பான அறிவு மதிப்பீடு செய்யப்படும்.

(iii) ***கல்வியின் புதிய முன்னேற்றங்கள் மற்றும் செயற்பாடுகள்.***- கற்றல் மற்றும் கற்பித்தல் தொடர்பான புதிய சிந்தனைகள், அனுபவங்கள் ஊடாக கற்றல், தர்க்க ரீதியலான சிந்தனைகள், கல்வியின் சமநிலை, விசேட தேவைகள் கொண்டோருக்கான கல்வி, முறைசாராக் கல்வி, முதியோர் கல்வி, ஆயுட்கால கல்வி, திறனை அடிப்படையாகக் கொண்ட கல்வி, வாழ்வதற்கான கல்வி, மாணவர் ஆலோசனை மற்றும் தொழில்சார் வழிகாட்டல் ஆகிய விடயங்கள் தொடர்பிலான அறிவு கருத்திற்கொள்ளப்படும்.

03. சித்தியடைவதற்காக பரீட்சார்த்தி விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் 40% அல்லது அதற்குக் கூடுதலான புள்ளிகளை பெற்றிருக்க வேண்டும்.

04. **பரீட்சையின் மொழி மூலம்** : சிங்களம் /தமிழ் மூலம் பரீட்சை நடைபெறும். விண்ணப்பதாரி விரும்பிய மொழி மூலம் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சார்த்தி தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தை மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

05. பரீட்சைக்கு தோற்றும் சகல விண்ணப்பதாரிகளினதும் பெறுபேறுகள் கொண்ட பெறுபேறு ஆவணம் செயலாளர், கல்வி அமைச்சிற்கு அனுப்பப்படும். பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகளை அனுப்ப பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது.

06. இவ் அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இல. 01 தொடக்கம் 07 வரை முதலாவது பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாவது பக்கத்திலுமாக தயாரிக்க வேண்டியதுடன் அதற்குரிய தகவல்களை தமது கையெழுத்தில் தெளிவாக உள்ளடக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத

விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணத்திற்குரிய பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாக அமையும் என்பதை அறியத்தருகிறேன். மேலும் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரி விளக்கம் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறின்றேல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதையும் மேலும் அறியத்தருகிறேன். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது அவ் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுவது அவசியம் என்பதை அறியத்தருகிறேன்.

**போலித் தகவல்களுக்கான தண்டனை.**- விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது மிகக் கவனத்துடன் சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்ட ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய பரீட்சாத்தி தகைமைற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீசைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் வேளையில் அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி தன்மை இரத்துச் செய்ய முடியும்.

07. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்தப்படுவதுடன் அதனை நடாத்துவதற்காக அவரினால் விடுவிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளை பின்பற்ற பரீட்சார்த்தி கட்டுப்பட்டுள்ளார். பரீட்சைக்கான சட்ட ஒழுங்குகள் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

08. விண்ணப்பப்படிவத்தை 2018, செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், தபால்பெட்டி இலக்கம் 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர்/வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்/மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக அல்லது அவர்களது சேவைப் பொறுப்பாளரினால் பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். அன்றைய தினத்திற்கு பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

09. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டோர் மாத்திரம் விண்ணப்பித்துள்ளதாக ஆரம்பத் தீர்மானத்திற்கமைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூர்த்தி செய்து அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்குரிய அனுமதிப்பத்திரங்கள் அனுப்பப்படும். விண்ணப்ப தாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அதுதொடர்பாகக் குறிப்பிட்ட பத்திரிகை அறிவித்தல் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்களில் அனுமதிப்பத்திரம் கிடைக்காத பட்சத்தில் அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்கத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் போது விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். கொழும்பிற்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரியாயின் அவ் விபரங்களுடன் பிரவேச அனுமதிப்பத்திரத்தின் பிரதியை அனுப்புவதற்குரிய பெக்ஸ் இலக்கத்துடன் கோரிக்கை கடிதத்தை பெக்ஸ் மூலம் அனுப்பி இது தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ளது பயன்மிக்கதாக அமையும். பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும் வேளையில் தேவையாயின் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தி அந்தஸ்தினை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதி, பரீட்சைக் கட்டணம் கொடுப்பனவிற்கு உரியதாயின் அதற்கான பற்றுச்சீட்டுப் பிரதியும் விண்ணப்பப் படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச் சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை வழங்குவது பரீட்சைக்கு தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்தி செய்வதாக ஏற்றுக்கொண்டல்ல என்பதனை கருத்தில் கொள்ள வேண்டும்.

10. i. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் பரீட்சாத்தியின் கையொப்பம் நிறுவனப் பொறுப்பாளர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். பரீட்சார்த்தி தமக்கு பணிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய பரீட்சை இலக்கத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சையின் முதலாவது தினத்தில் தமது ஒப்பத்தை உறுதிப்படுத்திய பரீட்சை அனுமதிப் பத்திரத்தை மண்டபப் பொறுப்பாளருக்கு கையளிக்க வேண்டும். தமது அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது.

ii. மேற்கூறப்பட்ட 08 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைகளை நிறைவேற்றத் தவறும் பரீட்சார்த்தியின் (பின்னர் சமர்ப்பிக்கப்படும்) முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

11. பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக சாட்சி சமர்ப்பிப்பது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். அதற்காக -

i. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது;
ii. செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்;
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

*12.* **பரீட்சைக் கட்டணம்**:

(அ) இப்பரீட்சைக்காக அறவிடப்படும் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீளச்செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு எந்தவொரு பரீட்சைக் கட்டணத்திற்காகவும் மாற்ற இடமளிக்கப்படமாட்டாது;
(ஆ) முழுமையான பரீட்சை அல்லது அதில் ஒரு பகுதிக்காக முதற்தடவையில் கட்டணம் அறவிடப்படமாட்டாது;
(இ) அதற்குப் பின்னர் அவ்வவ் தடவைகளுக்காக அறவிடப்படும். கட்டணம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| முழுமையான பரீட்சைக் கட்டணம் | : ரூ.500 |
| ஒரு பாடத்திற்காக | : ரூ.250 |

இப் பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பிற்கு 2003-02-13 இல் வைப்பிலிடக் கூடிவாறு நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு தபால் அல்லது உப தபால் அலுவலகத்திற்கு செலுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினைவிண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழராதுஒட்டி அனுப்பவேண்டும்.பற்றுச்சீட்டின்போட்டோப்பிரதியினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும் பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக் கட்டளை அல்லது முத்திரை பொறுப்பேற்கப்படமாட்டாது.

13. பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படவேண்டும். இச்சட்டங்களை மீறும்பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படவேண்டும் என்பதனை அறியத்தருகிறேன்.

14. சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் பிரசுரிக்கப்படும் அறிவித்தலில் வாசகங்களில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது தொடர்பின்மைகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே அமுலில் இருக்கும்.

15. இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்தப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பான தீர்மானம் எடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளருக்குரியதாகும்.

சுனில் ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
இசுருபாய,
பெலவத்தை,
2018, யூலை 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2018**

**Efficiency Bar Examination for officers in class 2 of Sri Lanka Principals service - 2018**

(கோட்ட/ வலயக் கல்விப் பணிப்பாளர் /மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் /மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், தபால்பெட்டி இலக்கம் 1503, கொழும்பு என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பவும். பரீட்சையின் பெயரைக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.)

01. பரீட்சைக்குத் தோற்றும் மொழி
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடுக.)

சிங்களம் - 2
தமிழ் - 3 ☐

02. (i) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.
(உ+ம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
(ii) முதலெழுத்துக்கள் இறுதியில் வரக்கூடியவாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.
(உ-ம் : GUNAWARDHANA, H.M.S.K.)
(iii) முழுப் பெயர் (சிங்களத்தில் /தமிழில்) :----.

03. முகவரி

(i) சொந்த :----.

(ii) அலுவலகம் :----.

(iii) அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கிலக் கெப்பிடல் எழுத்தில்) :----.

(iv) தொலைபேசி இலக்கம் (அலுவலகம்) :----.

04. (i) அதிபர் சேவையின் வகுப்பு/தரம் :----.

(ii) பாடசாலை/ அலுவலகம் :----.

(iii) மாகாணக் கல்வித் திணைக்களம்/ வலயக் கல்வி அலுவலகம் :----.

05. (i) தேசிய ஆளடையாள அட்டை இல. : | | | | | | | | | | | | |

(ii) பிறந்த திகதி :

ஆண்டு : | | | | |   மாதம் : | | |   திகதி : | | |

(iii) (ஆண்/பெண்) பால் :   ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)   பெண் - 1 | |

06. கையடக்கத் தொலைபேசி இலக்கம் :-

| | | | | | | | | | |

07. வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆம் பந்தியின் (அ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாட இலக்கத்துடன் விண்ணப்பிக்கும் பாடங்கள்.

பாட இல. 01 - பாடசாலை நிருவாகம் மற்றும் மேற்பார்வை | |
பாட இல 02 - பாடசாலைத் திட்டமிடல் | |
பாட இல 03 - கல்வியின் புதிய முன்னேற்றங்கள் மற்றும் செயற்பாடுகள் | |

(உரிய பாட இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.)

08. இதற்கு முன்னர் இலக்கம் 1086/26 மற்றும் 1999.07.02 ஆந் திகதிய இலங்கை அதிபர் சேவையின் பிரமாணக் குறிப்பிற்கமைய இடம்பெற்ற வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் பாடசாலையின் நிர்வாகம் மற்றும் மேற்பார்வைப் பாடத்தில் சித்தியடைந்த உத்தியோகத்தர்கள் கல்வி அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 33/2014 இற்கமைய இவ் இரண்டாவது வினைத்திறன் தடைதாண்டலில் பாடசாலை நிருவாகம் மற்றும் மேற்பார்வைப் பாடத்தில் சித்தியடையும் தேவையிலிருந்து விடுவிக்கப்படுவர். இப்பாடத்தில் சித்தியடைவதாயின் ஆண்டு, சித்தி மற்றும் மொழியைக் குறிப்பிடவும்.

| பாடம் | பாட இலக்கம் | சித்தி | மொழி மூலம் |
|---|---|---|---|
| பாடசாலை நிருவாகம் மற்றும் மேற்பார்வை | | | |

09. பரீட்சைக் கட்டணம்:-

(i) செலுத்தப்பட்ட தபால்/ உப தபால் அலுவலகம் :----.
(ii) செலுத்தப்பட்ட நிதி :----.
(iii) செலுத்திய திகதி :----.
(iv) பற்றுச் சீட்டு இல :----.

பற்றுச்சீட்டைக் கழராது இங்கே ஒட்டவும். (பற்றுசீட்டின் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்)

10. மேற்கூறப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதிசெய்கிறேன். மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு நான் கட்டுப்படுகிறேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. பரீட்சை ஆணையாளர் நாயகம்.-

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி எனது கோட்டத்தின்/ வலயத்தின்/ மாகாணத்தின் உத்தியோகத்தர் என உறுதிப்படுத்துகிறேன். மேலும் பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்/ பரீட்சாத்தி பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டை உரியவாறு ஒட்டியுள்ளதாகவும் உறுதி செய்கிறேன்.

-----,
கோட்ட/ வலயக் கல்விப் பணிப்பாளர்/
மேலதிக மாகாணக் கல்விப்
பணிப்பாளர்/ மாகாணக் கல்விப்
பணிப்பாளரின் கையொப்பம்

முகவரி :-----.
திகதி : -----.
(பதவி முத்திரையுடன் உறுதிப்படுத்தவும்) (பொருத்தமற்ற சொற்களை நீக்கவும்.)

8-204/1

---

## கல்வி அமைச்சு

இலங்கை அதிபர் சேவையின் 3 ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2018

இலக்கம் 1885/31 மற்றும் 2014.10.22 ஆந் திகதிய இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பிற்கு அமைய இலங்கை அதிபர் சேவையின் 3 ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2018, நவெம்பர் மாதம் கொழும்பில் நடைபெறும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. இப் பரீட்சைக்குரிய பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் இலக்கம் 1885/31 கொண்ட 2014.10.22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப் பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களின் வசதிக்காக பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(அ) **பரீட்சை ஒழுங்கு விதிகள்** - வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் பாடங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(i) பாட இல. 01 - தாபன விதிக் கோவையின் ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் அரச சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள் :-
100 புள்ளிகள் - 02 மணித்தியாலம்

(ii) பாட இல. 02 - பாடசாலையின் நிதி நிருவாகம் மற்றும் நிதி ஒழுங்குக் கோவை:-
100 புள்ளிகள் - 02 மணித்தியாலம்

**பாட விதானம்** :-

(i) தாபன விதிக் கோவையின் ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள் -
தாபன விதிக் கோவையின் வாசகங்களில் VII, VIII, IX, X, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII வாசகங்கள் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயற்சாதனை ஒழுங்கு விதிகள் தொடர்பிலான அறிவு பரீசீலனை செய்யப்படும்.

(ii) பாடசாலைகளின் நிதி நிருவாகம் மற்றும் நிதி ஒழுங்குக் கோவை -
வரவு செலவுத் திணைக்களத்தின் நிதி நிருவாகம் மற்றும் நிதிப் பொறுப்புக்களை கையளித்தல், நிதிப் பொறுப்பேற்பினை கணக்குகளில் பதிதல் மற்றும் மீள் கட்டமைப்புக் கொடுப்பனவு, அரச நிதியைப் பொறுப்பேற்றல், கட்டுநிதி மற்றும் வங்கிக் கடன் பணிகள் மற்றும் சேவைகள், பொருள் ஆய்வு, கணக்காய்வு, அரச அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் நாளேடு, வருமான மற்றும் செலவினச் சுருக்கம், வங்கி இணக்கக்கூற்று, செலுத்தப்படாத கொடுப்பனவு, கடமைத் தொலைபேசி தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை மற்றும் நிதி ஒழுங்குக் கோவைகள் தொடர்பான பொது விளக்கம் பரிசீலனை செய்யப்படும்.

03. சித்தியடைவதற்காக பரீட்சார்த்தி விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பாடங்களில் குறைந்தபட்சம் 40% அல்லது அதற்குக் கூடுதலான புள்ளிகளை பெற்றிருக்க வேண்டும்.

04. பரீட்சையின் மொழி மூலம் : சிங்களம்/ தமிழ்மொழி மூலம் பரீட்சை நடைபெறும். விண்ணப்பதாரி விரும்பிய மொழி மூலம் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சார்த்தி தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தை மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

05. பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரிகளினதும் பெறுபேறுகள் கொண்ட பெறுபேற்று ஆவணம் "செயலாளர், கல்வி அமைச்சிற்கு" அனுப்பப்படும். பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகளை அனுப்ப பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது.

06. இவ் அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இல. 01 தொடக்கம் 07 வரை முதலாவது பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாவது பக்கத்திலுமாக தயாரிக்க வேண்டியதுடன் அதற்குரிய தகவல்களை தமது கையெழுத்தில் தெளிவாக உள்ளடக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப் படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணத்திற்குரிய பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாக அமையும் என்பதை அறியத்தருகிறேன். மேலும் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரி விளக்கம் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறின்றேல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதையும் மேலும் அறியத்தருகிறேன். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது அவ் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப் படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுவது அவசியம் என்பதை அறியத்தருகிறேன்.

**போலித் தகவல்களுக்கான தண்டனை** :- விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது மிகக் கவனத்துடன் சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்ட ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் வேளையில் அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி அந்தஸ்தை இரத்துச் செய்ய முடியும்.

07. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்தப்படுவதுடன் அதனை நடாத்துவதற்காக அவரினால் விடுக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளை பின்பற்ற பரீட்சார்த்தி கட்டுப்பட்டுள்ளார். பரீட்சைக்கான சட்ட ஒழுங்குகள் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

08. விண்ணப்பப்படிவத்தை 2018, செத்தெம்பர் 03 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால்பெட்டி இலக்கம் 1503, கொழும்பு. என்ற முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர்/ வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக அல்லது தங்களது சேவைப் பொறுப்பாளரினால் பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். அன்றைய தினத்திற்கு பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

09. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டோர் மாத்திரம் விண்ணப்பித்துள்ளதாக ஆரம்பத் தீர்மானத்திற்கமைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூர்த்தி செய்து அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்குரிய அனுமதிப்பத்திரங்கள் அனுப்பப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அதுதொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்களில் அனுமதிப்பத்திரம் கிடைக்காத பட்சத்தில் அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்கத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் போது விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். கொழும்பிற்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரியாயின் அவ்

விபரங்களுடன் பிரவேச அனுமதிப்பத்திரத்தில் பிரதியை அனுப்புவதற்குரிய பெக்ஸ் இலக்கத்துடன் கோரிக்கைக் கடிதத்தை பெக்ஸ் மூலம் அனுப்பி இது தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வது பயன்மிக்கதாக அமையும். பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும் வேளையில் தேவையாயின் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தி அந்தஸ்தினை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதி, பரீட்சைக் கட்டணம் கொடுப்பனவிற்கு உரியதாயின் அதற்கான பற்றுச்சீட்டுப் பிரதியும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச் சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பரீட்சாத்திக்கு பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை வழங்குவது பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்தி செய்வதாக ஏற்றுக்கொண்டல்ல என்பதனை கருத்தில் கொள்ள வேண்டும்.

10. (i) விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் பரீட்சார்த்தியின் ஒப்பம் நிறுவனப் பொறுப்பாளர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். பரீட்சார்த்தி தமக்கு பணிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய பரீட்சை இலக்கத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சையின் முதலாவது தினத்தில் தமது ஒப்பத்தை உறுதிப்படுத்திய பரீட்சை அனுமதிப் பத்திரத்தை மண்டபப் பொறுப்பாளருக்கு கையளிக்க வேண்டும். தமது அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது.

(ii) மேற்கூறப்பட்ட 08 வது வாசகத்தில் குறிப்பிடப்பட்ட தேவைகளை நிறைவேற்ற தவறும் பரீட்சார்த்தியின் (பின்னர் சமர்ப்பிக்கப்படும்) முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

11. பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக சாட்சி சமர்ப்பிப்பது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும் அதற்காக-

i. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை,
ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு,
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

12. **பரீட்சைக் கட்டணம்**:

(அ) இப்பரீட்சைக்காக அறவிடப்படும் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீளச்செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு எந்தவொரு பரீட்சைக் கட்டணத்திற்காகவும் மாற்ற இடமளிக்கப்படமாட்டாது.

(ஆ) முழுமையான பரீட்சை அல்லது அதில் ஒரு பகுதிக்காக முதற்தடவையில் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(இ) அதற்குப் பின்னர் அவ்வவ் தடவைகளுக்காக அறவிடப்படும் கட்டணம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| முழுமையான பரீட்சைக் கட்டணம் | : ரூ.500 |
| ஒரு பாடத்திற்காக | : ரூ.250 |

இப் பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பிற்கு 2003-02-13 இல் வைப்பிலிடக் கூடிவாறு நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு தபால் அல்லது உப தபால் அலுவலகத்திற்கு செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழராது ஒட்டி அனுப்ப வேண்டும். பற்றுச் சீட்டின் போட்டோப் பிரதியினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும் பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக் கட்டளை அல்லது முத்திரை பொறுப்பேற்கப்படமாட்டாது.

13. பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படவேண்டும். இச்சட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படவேண்டும் என்பதனை அறியத்தருகிறேன்.

14. சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் பிரசுரிக்கப்படும் அறிவித்தலில் வாசகங்களில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது தொடர்பின்மைகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே அமுலில் இருக்கும்.

15. இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்தப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளருக்குரியதாகும்.

சுனில் ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
இசுருபாய,
பெலவத்தை,
2018, யூலை 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை அதிபர் சேவையின் 3 ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2018**

**Efficiency Bar Examination for officers in class 3 of Sri Lanka Principals service - 2018**

(கோட்ட/ வலயக் கல்விப் பணிப்பாளர் /மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் /மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், தபால்பெட்டி இலக்கம் 1503, கொழும்பு, என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவும். பரீட்சையின் பெயரைக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.)

01. பரீட்சைக்குத் தோற்றும் மொழி
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடுக.)

சிங்களம் - 2
தமிழ் - 3 ☐

02. (i) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.
(உ+ம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
(ii) முதலெழுத்துக்கள் இறுதியில் வரக்கூடியவாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.
(உ-ம் : GUNAWARDHANA, H.M.S.K.)
(iii) முழுப் பெயர் (சிங்களத்தில் /தமிழில்) :----.

03. முகவரி
a. சொந்த :----.
b. அலுவலகம் :----.
c. அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி :----.
(ஆங்கிலக் கெப்பிடல் எழுத்தில்)
d. தொலைபேசி இலக்கம் (அலுவலகம்) :----.

04. i. அதிபர் சேவையின் வகுப்பு/தரம் :----.
ii. பாடசாலை/ அலுவலகம் :----.
iii. மாகாணக் கல்வித் திணைக்களம்/ வலயக் கல்வி அலுவலகம் :----.

05. (i) தேசிய ஆளடையாள அட்டை இல : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

(ii) பிறந்த திகதி :

வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

(iii) (ஆண்/பெண்) பால் : ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்) பெண் - 1 ☐

06. கையடக்கத் தொலைபேசி இலக்கம் :-

☐☐☐☐☐☐☐☐☐☐

07. வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆம் பந்தியின் (அ) இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பாட இலக்கத்துடன் விண்ணப்பிக்கும் பாடங்கள்.

பாட இல. 01 - தாபன விதிக் கோவையின் ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் அரச சேவை ஆணைக்குழுவின் செயற்பாடு ஒழுங்கு விதிமுறைகள் ☐
பாட இல 02 - பாடசாலைகளின் நிதி நிருவாகம் மற்றும் நிதிக் கோவை ☐

(உரிய பாட இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.)

08. பரீட்சைக் கட்டணம்:-

(i) செலுத்தப்பட்ட தபால்/ உப தபால் அலுவலகம் :----.
(ii) செலுத்தப்பட்ட தொகை :----.
(iii) செலுத்திய திகதி :----.
(iv) பற்றுச் சீட்டு இல :----.

| பற்றுச்சீட்டைக் கழராது இங்கே ஒட்டவும். (பற்றுசீட்டின் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்) |
|---|

09. மேற்கூறப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதிசெய்கிறேன். மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு நான் கட்டுப்படுகிறேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. **பரீட்சை ஆணையாளர் நாயகம்**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி எனது கோட்டத்தின்/வலயத்தின்/மாகாணத்தின் உத்தியோகத்தர் என உறுதிப் படுத்துகிறேன். மேலும் பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்/ விடுவிக்கப்படவில்லை எனவும் பரீட்சாத்தி பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டை உரியவாறு ஒட்டியுள்ளார் எனவும் உறுதி செய்கிறேன்.

-----,
கோட்ட/வலயக் கல்விப் பணிப்பாளர்/
மேலதிக மாகாணக் கல்விப்
பணிப்பாளர்/ மாகாணக் கல்விப்
பணிப்பாளரின் கையொப்பம்

முகவரி :-----.

திகதி : -----.

(பதவி முத்திரிரையுடன் உறுதிப்படுத்தவும்) (பொருத்தமற்ற சொற்களை நீக்கவும்.)

8-204/2

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள்ஏற்றுக்கொள்ளப்படும்இறுதிநாளும்,நேரமும்கீழ்குறிப்பிடப்பட்டிருக்கும்அட்டவணையில்காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்**.

**அட்டவணை - 2018**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஓகத்து** | .. | வெள்ளி | 03.08.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.07.2018 |
| | | வெள்ளி | 10.08.2018 | .. | நண்பகல் 12 | வியாழன் | 26.07.2018 |
| | | வெள்ளி | 17.08.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.08.2018 |
| | | வெள்ளி | 24.08.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.08.2018 |
| | | வெள்ளி | 31.08.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.08.2018 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 07.09.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.08.2018 |
| | | வெள்ளி | 14.09.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.08.2018 |
| | | வெள்ளி | 21.09.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.09.2018 |
| | | வெள்ளி | 28.09.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.09.2018 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 05.10.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.09.2018 |
| | | வெள்ளி | 12.10.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.09.2018 |
| | | வெள்ளி | 19.10.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.10.2018 |
| | | வெள்ளி | 26.10.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.10.2018 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.